செய்தி வெளியீடு எண்–752 நாள்–20.11.2007

பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை

# செய்தி வெளியீடு

தமிழக அரசு, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் , சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென பல்வேறு நலத்திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இத்துறையின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்கள், மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுகள் வழங்குதல், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு, தந்தை பெரியார் நினைவுப் பரிசு, கிராமப்புற மிபிவ/ சீம மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவியர்களை தலைசிறந்த பள்ளிகளில் சேர்த்து பயில வைக்கும் திட்டம், மாநிலம் முழுதும் விடுதிகள் பராமரித்தல், விடுதகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு இலவச உண்டி மற்றும் உறையுள் , சீருடைகள் மற்றும் சிறப்பு வழிகாட்டிகள் வழங்குதல், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 260 கள்ளர்சீரமைப்பு பள்ளிகள் செயல்படுவது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் +1 மாணவ / மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குதல், இலவச தையல் இயந்திரம் மற்றும் தேய்ப்புப் பெட்டிகள் வழங்குதல், இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்குதல் போன்ற பல்வேறு வகையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இத்துறையின் திட்டங்களை செயல்படுத்த அரசு ரூ.380.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம், இவ்வின மக்களுக்கு தொழில் துவங்க பல்வேறு வகையான கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2007-08ல் இதுவரை தமிழ்நாடு பிற்படுத்ததப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் ரூ.1437.51 இலட்சம் 15119 நபர்களுக்கும், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.912.55 இலட்சம் 5038 நபர்களுக்கும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், சிறுபான்மையினரின் நலனை பிரத்யேகமாக கவனிக்கும் பொருட்டு, புதியதாக ஒரு துறை ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப படிப்பு / பட்ட மேற்படிப்பு பயிலும் சிறுபான்மையினர் மாணவ / மாணவியருக்கு நடப்பாண்டு முதல் மத்திய அரசின் நிதி உதவியுடன் தகுதி அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ரூ.2.50 கோடி செலவில் 5000 சிறுபான்மையின இளைஞர்களுக்கு இலவச திறன் வளர்க்கும் வேலை வாய்ப்பு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்களின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்குபவர் பயிற்சி, தோல் பொருள் தயாரிப்பில் சான்றிதழ் படிப்புகள், பல்வேறு வகையான கணினிப் பயிற்சிகள், கிளினிக்கல் மற்றும் நர்ஸிங் அஸிஸ்டன்ட், உணவு உற்பத்தி, ஆடை உற்பத்தி தொழில் நுட்பவியல் பயிற்சிகள் உள்ளிட்ட 42 வகையான இலவச பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இதன் மூலம் 15,856 மாணவ மாணவிகள் பயனடைந்தனர்.

மேலும், நடப்பாண்டில், முதன்முறையாக, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்த 200 மகளிருக்கு, இலவச விமானப் பணிப்பெண் பயிற்சி, ரூ. 1.80 கோடி செலவில் அளிக்கப்பட உள்ளது.

இவை தவிர, நடப்பாண்டில், ரூ. 10 .00 கோடி செலவில், 40 வகையான பயிற்சிகள் 9841 மாணவ / மாணவிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்துறையின் நலத்திட்டங்கள் தொடர்பாக, அனைத்து மாவட்ட அலுவலர்களின் பணி முன்னேற்றம் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், இன்று ( 20.11.2007) சென்னையில், மாண்பு மிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு செயலர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சிறுபான்மையினர் நல ஆணையர், மற்றும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.